# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2023/32 - 2017 ජුනි මස 14 වැනි බදාදා - 2017.06.14

2023/32 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 14 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பீ. 21/78 (xv).

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

27(1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர் கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மேல், இலங்கை, யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் வளாகங்களையும் துறைகளையும் குறித்துரைக்கின்றதான, மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 139 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு கருதப்படுகின்ற, சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றாக இருப்பதான 2007, ஒற்றோபர் 09 ஆந் திகதிய 1518/15 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட (2016, மாச்சு 29 ஆந் திகதிய 1960/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான) கட்டளைக்கான அட்டவணையை, அக்கட்டளைக்கான அட்டவணையின் நிரல் I இல் காணப்படுகின்ற "மருத்துவ பீடம்" என்னும் விடயத்திற்கு நேரொத்ததாகவுள்ள அட்டவணையின் நிரல் II இல் காணப்படுகின்ற, "12. வாகடவியல் துறை" என்னும் பதிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பதிவுகளைச் சேர்ப்பதனால் இக்கட்டளை மூலம் திருத்துகின்றேன்.

"13. நுண்ணுயிரியல் துறை
14. ஒட்டுண்ணியியல் துறை".

லக்ஷ்மன் கிரியெல்ல,
உயர் கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர்.

கொழும்பு,
2017, யூன் 12.

06-1023


1A – PG 3563 – 508 (2017/06) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.